## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

## அசல் வழக்கு எண். 15/2025

பெயர் : மீனாட்சி சுந்தரம் P.W.1.

த/பெ. : ராமலிங்கம்

தேதி : 25.09.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை: –**

1. எனது தாயார் பாப்பாத்தியின் பூர்விகம் திருவையாறு ஆகும். பகவதி பிள்ளை எனபவரை எனது அம்மா முதல் திருமணம் செய்து அதன்மூலம் அவருக்கு கார்த்திகேயன், சுந்தரவடிவேல் மற்றும் நானும் வாரிசுதாரர் என்றால் சரியல்ல. எனது தாயார் கிராம தலைமை செவிலியராக பணியாற்றினார் என்றால் சரிதான். ராமலிங்கம் என்பவருக்கும் எனது தாயாருக்கும் எப்போது எங்கு திருமணம் நடைபெற்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும் எனது தாயார், கார்த்திகேயன், சுந்தரவடிவேல், பகவதி பிள்ளை ஆகியோர் மேமாத்துாரில் ஒரே வீட்டில் வசித்து வந்தோம் என்றால் சரிதான்.

2. பகவதி பிள்ளை எப்போது இறந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. ராமலிங்கம் எங்கு எப்போது இறந்தார் என்றால் 12.06.2013 அன்று செம்பனார்கோவில் திருவள்ளுவர் தெருவில் இறந்தார். எனக்கு தமிழ் எழுதபடிக்க தெரியும் என்றால் சரிதான். எனது வழக்குரையில் மேமாத்துாரில் ராமலிங்கம் இறந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ராமலிங்கம் இறந்து 10 வருடங்கள் கழித்து இறப்பு சான்றிதழ் பெற்றதில் ஏற்பட்ட கால தாமதத்திற்கான காரணம் என்னவென்றால் நான் வெளியூரில் இருந்த காரணத்தினால் வாங்கவில்லை. பாப்பாத்தி எப்போது இறந்தார் என்றால் 2013 ம் ஆண்டு இறந்தார். எனதுஅம்மா இறந்தபோது கார்த்திகேயன், சுந்தரவடிவேல், வாதியாகிய நானும் சேர்ந்து தான் ஈமகிரியை சடங்குகளை செய்தோம் என்றால் சரிதான்.

3. இந்தியாவில் ஆதார் அடையாள அட்டை 2010 ல் அறிமுகப்படுத்தப்பட்டது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாசாஆ 4 ஆன ஆவணமானது 2010 ற்கு பிறகு தான் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். நான் கொடுத்த தகவலின் அடிப்படையில் ஆவணங்கள் எதுவும் சரிபார்க்கப்படாமல் தான் ஆதார் அடையாள அட்டை எனக்கு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. ஆவணங்களை

சரிபார்த்து தான் வழங்கினார்கள். நான் 05.11.1966 அன்று செம்பனார்கோவில் ஆரம்ப சுகாதரா நிலையத்தில் பிறந்தேன் என்று எனது தாயார் கூறினார். எனது பிறப்பு சான்றிதழை தாக்கல் செய்தால் எனது தகப்பானர் யார் என்ற உண்மை தெரியவந்துவிடும் என்பதால் நான் எனது பிறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பிறந்த காலத்தில் பிறப்பு சான்றிதழ் வழங்கும் வழக்கம் இல்லை.

4. நான் செம்பனார்கோவில் சம்பந்தம் மேல்நிலைப்பள்ளியில் 10 வகுப்பு வரை படித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பள்ளி சான்றிதழ்களை தாக்கல் செய்திருந்தால் எனது தகப்பனார் பெயர் தெரியவரும் என்றால் சரிதான். பாப்பாத்திக்கும் ராமலிங்கத்திற்கும் எப்போது திருமணம் நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியவில்லை என்பதாலும், நான் எந்த ஊரில் பிறந்தேன் என்று எனது பிறப்பை பற்றிய சரியான விபரங்கள் என்னால் கூற இயலாததாலும், பாப்பாத்திக்கும் ராமலிங்கத்திற்கும் திருமணம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. நான் ராமலிங்கத்திற்கு Biological son இல்லை என்றால் சரியல்ல. நான் ராமலிங்கத்தின் வாரிசு என பொய்யாக கூறி பொய்யான சங்கதிகளை கொண்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதுஅல்ல என்றால் சரியல்ல. ராமலிங்கத்திற்கும் பாப்பாத்திக்கும் எந்த காலத்திலும் திருமணம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. பாப்பாத்திக்கும் ராமலிங்கத்திற்கும் திருமணம் நடந்ததாகவும், அந்த திருமணத்தின் பயனாக நான் பிறந்ததாக சொல்வதும் உண்மை அல்ல என்றால் சரியல்ல.